செய்தி வெளியீடு எண்: 411 நாள் : 14.08.2016

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>இந்த ஆண்டு சுதந்திர தினத்தையொட்டி 14 காவல் துறை அதிகாரிகளுக்கு சிறப்புப் பதக்கங்கள் வழங்க மாண்புமிகு முதலமைச்சரின் ஆணை</u>

புலன் விசாரணைப் பணியில் மிகச்சிறப்பாகப் பணியாற்றியதை அங்கீகரிக்கும் வகையிலும் மற்றும் பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததை பாராட்டும் வகையிலும் கீழ்கண்ட காவல் அதிகாரிகளுக்குச் **<u>சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழக முதலமைச்சரின் காவல் புலன் விசாரணைக்கான சிறப்புப் பணிப் பதக்கங்களை</u>** வழங்கிட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்:

**1. திரு. எஸ்.அரவிந்த்,**
சூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு,
அயல் பணி,
குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை,
சென்னை.

**2. திரு. என்.சிலம்பரசன்,**
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
திண்டிவனம் உட்கோட்டம்,
விழுப்புரம் மாவட்டம்.

**3. திரு. மா.விவேகானந்தன்,**
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
உடுமலைப்பேட்டை உட்கோட்டம்,
திருப்பூர் மாவட்டம்.

**4. திரு. மு. சோமசுந்தரம்,**
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
வாழப்பாடி உட்கோட்டம்,
சேலம் மாவட்டம்.

**5.திருமதி. எஸ்.ஸ்ரீமதி,**
காவல் ஆய்வாளர்,
குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை,
திருப்பூர்.

**6. திரு. டி. சரவணக்குமார்,**
காவல் ஆய்வாளர்,
குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை,
இராமநாதபுரம் மாவட்டம்.

**7.திரு.அ. தர்மலிங்கம்,**
காவல் ஆய்வாளர்,
தனிப்பிரிவு,
விருதுநகர் மாவட்டம்.

.....2

**8.திரு. த. ஜோதி,**
காவல் ஆய்வாளர்,
தொடர் குற்ற குழு,
கோயம்புத்தூர் மாநகர்.

**9. திருமதி.ரே. ஹேமலதா,**
காவல் ஆய்வாளர்,
ஜீயபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையம் ,
திருச்சி மாவட்டம்.

இதே போன்று, பொது மக்களின் சேவையில் தன்னலம் கருதாமல் சிறப்பாக செயல்பட்டு சீரிய பணியாற்றிய கீழ்க்கண்ட காவல்துறை அதிகாரிகளுக்கு அவர்களது பணியைப் பாராட்டி, **சிறந்த பொதுச் சேவைக்கான தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கம்** வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்:

**1. திரு. ஜே.கே.திரிபாதி, இ.கா.ப.,**
காவல்துறை கூடுதல் இயக்குநர்,
சட்டம் மற்றும் ஒழுங்கு, சென்னை.

**2. திரு. என்.கே.செந்தாமரை கண்ணன், இ.கா.ப.,**
காவல் துறை தலைவர்,
வடக்கு மண்டலம்,
சென்னை.

**3. திரு. த.செந்தில் குமார், இ.கா.ப.,**
காவல் துறை துணைத் தலைவர்,
தஞ்சாவூர் சரகம்.

**4. திரு. ந.மா.மயில்வாகனன், இ.கா.ப.,**
காவல் கண்காணிப்பாளர்,
திருவாரூர் மாவட்டம்.

**5. திரு. சி.பாஸ்கர்,**
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
கும்பகோணம் உட்கோட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

விருதுகள் பெறுவோர் ஒவ்வொருவரும் தலா எட்டு கிராம் எடையுடன் கூடிய தங்கப் பதக்கமும், 5 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் பெறுவார்கள்.

மேற்கண்ட விருதுகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் சிறப்பு விழாவில் மேற்சொன்ன காவல் துறை அதிகாரிகளுக்கு அளிக்கப்படும்.

**அபூர்வ வர்மா**
அரசு முதன்மைச் செயலர்,
உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை,
சென்னை – 9

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**